2018 ஜூன் 27]

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழ வைத்த தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழியில் நல்லாட்சி நடத்தி வருகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.*

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி தாலுகா புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. அந்தத் தாலுகா பகுதியில் புதிதாகக் கருவூலம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் அன்போடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னவாறு, தாலுகா தலைமையிடங்களில் சார் கருவூலம் இல்லாத இடமாக ஊத்துக்குளி வருகின்ற காரணத்தினால், அங்கு ஆய்வு செய்யப்பட்டு, சார் கருவூலம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

புதிய கல்வி மாவட்டம்

***12661—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கல்வி மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 27

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்பதைப்போல, எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டிருந்தாலும், அவர்களுக்கும் சாதகமாக இந்த அரசு நினைத்த நேரத்தில் அவர்களின் பணியையும் ஆற்றுகிறது என்கிற முறையில், நம்முடைய திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் புதிதாக மாவட்ட கல்வி அலுவலகம் துவங்கப்பட்டு, 1-6-2018 முதல் அந்த அலுவலகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூனியன் மாறி இருந்தும்கூட, இக்கல்வி மாவட்டத்தை எங்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னவுடன் அந்த மாவட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குண்டடத்தைப் பல்லடத்திலிருந்து பிரித்து, எங்களுக்கு பழையபடி தாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கல்வி மாவட்டத்தை உருவாக்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், C.S.I. மகளிர் பள்ளியில் 750-க்கும் அதிகமான மாணவிகள் படிக்கிறார்கள். கூடுதலாகக் கட்டடம் கட்ட வேண்டுமென்று சென்ற முறை கோரிக்கை விடுத்திருந்தேன். அந்தப் பள்ளிக்குக் கட்டடம் கட்டப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப, எதிர்காலத்தில் எவ்வளவு கூடுதல் கட்டடங்கள் வேண்டும் என்பதை அரசு பரிசீலித்து, கட்டடம் கட்ட, நபார்டு திட்டத்தில் இந்த ஆண்டு அது இணைக்கப்படும் என்பதை மாண்புமிகு*

2018 ஜூன் 27]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்,
இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்'

இது கண்ணனுக்கான பாட்டு. எங்கள் அண்ணனுக்கான ஒரு பாட்டு இருக்கிறது. 'இங்கிருந்துதான் வந்தான், எடப்பாடி நான் என்றான், இன்று இவனை யாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்' என்று தமிழர்கள் பாடுகிற நாள் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திட்டங்களால் தமிழக அரசு முன்னேற்றப் பாதையிலே முனைந்து சென்றுகொண்டிருக்கிறது.

அந்த வகையிலே, சாதனை படைப்பதிலே கல்வித் துறை தலைமை தாங்குகிறது. பள்ளிக் கல்வித் துறையிலே சத்தமில்லாமல் ஒரு சாதனை நடந்திருக்கிறது. அது என்னவென்றால், இந்த ஆண்டு அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை ஒரு இலட்சத்தை எட்டியிருக்கிறது என்பது ஒரு சாதனை, வரலாற்றுச் சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இந்த அவையின் மூலமாக, கல்வித் துறைக்கு ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். என்னவென்றால், இது ஜனநாயக நாடு. எனவே, சட்டத்தின்பால் இயங்குகிற ஓர் அரசு, சட்டத்தை ஒரு பாடமாக மாணவர்களுக்கு அடிப்படையிலேயே கற்றுத் தரவேண்டும். அரசமைப்புச் சட்டம், அடிப்படை உரிமைகள், Constitutional law *என்று சொல்லப்படுகிற அரசமைப்புச் சட்டம் நமக்குத் தந்திருக்கிற பாதுகாப்புகளைக் கற்றுத் தந்து,*

சட்டத்தின்பால் நடக்க வேண்டும் என்று நீதி போதனைகள் சொல்வதைப் போல சட்டத்தையும் மாணவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும். அந்த வகையிலே சட்டத்தை ஒரு பாடமாக வைக்க இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் சட்டத்தை பாடத் திட்டத்தில் படிப்பது என்பது வேறு. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முறையில், 6 முதல் 10 ஆம் வகுப்பு வரையில் இருக்கின்ற மாணவர்களுக்கு பாடத் திட்டத்திலே சில பகுதிகளைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

223—

பகுதி நேர நியாய விலைக் கடை

***3261—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் வட்டம், மேட்டுப்பாளையம் மற்றும் வாலாஜாபாத் வட்டம், கே.எஸ்.பி நகர், குருவிமலை பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?